முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

1.செங்கீரைப் பருவம் விளக்குக.

செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று மென்மையாக குழந்தையின் தலை 5, 6 ஆம் மாதங்களில் அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர்.

இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

2.முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் கூறப்படும் அணிகலன்கள் யாவை?

- சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது.
- அரைஞாண் - இடையில் அணிவது
- சுட்டி - நெற்றியில் அணிவது.
- குண்டலம், குழை - காதில் அணிவது.
- சூழி - தலையில் அணிவது.

3.ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் விளக்குக.

- ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம் ) - சிற்றில், சிறுபறை, சிறுதேர்.
- பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) - கழங்கு, அம்மானை, ஊசல்.
- இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் - காப்பு. செங்கீரை, தால், சப்பாணி. முத்தம், வருகை, அம்புலி.

4. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தைக் குமரகுருபரர் எவ்வாறு விளக்குகிறார்?

திருவடியில் அணிந்த சிறு செம்பொன்னால் ஆன கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும். இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும். பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும். பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும். கம்பிகளால் உருவான குண்டலங்களும் குழைகளும் அசைந்தாடட்டும். காதின் உச்சிக் கொண்டையும் ஒளியுள்ள முத்துகளோடு ஆடட்டும்.

தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக என குமரகுருபரர் விளக்குகிறார்.

5.குமரகுருபரர் குறிப்பு வரைக.

குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தின் எட்டாம் பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.

- இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ்.
- பத்துப் பருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும்.
- ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.
- குமரகுருபரரின் காலம் 17 ஆம் நூற்றாண்டு. இவர் தமிழ் வடமொழி. இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்.
- கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ். மதுரைக்கலம்பகம். சகலகலாவல்லிமாலை. நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.